ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2021 யூலை 14

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2021 மே

## பொதுநோக்கு

*வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 மேயில் விரிவடைந்தது. 2020 மேயிலும் பார்க்க ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் 2021 மேயில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டமைக்கு முக்கியமாக ஓராண்டிற்கு முன்னைய உலகளாவிய நோய்த்தொற்றின் புள்ளிவிபர அடிப்படைத் தாக்கங்களுடன் தொடர்புடைய இடையூறுகளே காரணமாக அமைந்தன. முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்திருந்த வேளையில், இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன. இம்மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்தும் அதிகரித்திருந்த வேளையில், சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் குறைந்த மட்டங்களிலேயே காணப்பட்டன. நிதியியல் கணக்கில், அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள வெளிநாட்டு முதலீடுகள் 2021 மேயில் சிறிதளவான தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. அதேவேளை, இலங்கை ரூபா இம்மாதம் முழுவதும் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டதுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 மே மாத இறுதிக்காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4.0 பில்லியனாக விளங்கியது.*

**அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)**

| வகை | மே 2020 ஐ.அ.டொ.மில் | மே 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன-மே 2020 ஐ.அ.டொ.மில் | சன-மே 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 587 | 892 | 52.0 | 3,519 | 4,692 | 33.3 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 994 | 1,607 | 61.7 | 6,619 | 8,356 | 26.2 |
| வர்த்தக மீதி | -407 | -716 | | -3,101 | -3,663 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | - | 2 (இ) | - | 682 (ஆ) | 21 (இ) | -97.0 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 432 | 460 | 6.6 | 2,407 | 2,846 | 18.2 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -36 | -12 | | -64 | -119 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 121 | 7 (உ) | | 1,092 | 877 (ஊ) | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் (மொத்தம்) | 2 | 7 | | 86 | 14 | |
| நீண்ட காலக் கடன்கள் (மொத்தம்) | 118 | வி.கி. | | 1,006 | 863 (ஊ) | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (மொத்தம்) (எ) | | | | 188 | 198 | |
| திரண்ட நிலுவை | | | | -797 | -1,053 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்.
(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2021 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன
(உ) அரசாங்கத்திற்கான மொத்த உட்பாய்ச்சல்களுக்கான தரவுகள் 2021 மேயில் வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கவில்லை
(ஊ) நீண்ட காலக் கடன்களுக்கான ஒன்றுசேர்ந்த தரவுகள் 2021 ஏப்பிறல் வரையிலான வெளிநாட்டுக் கடன்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ளன
(எ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான தரவுகள் கிடைக்கப்பெறுவதுடன் முதலீட்டுச் சபை மூலம் பதிவுசெய்யப்பட்டவாறான தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

**வர்த்தக மீதி: வர்த்தகப் பற்றாக்குறை 2020 மேயில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 407 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2021 மே மாதத்தில் ஐ.அ.டொலர் 716 மில்லியனிற்குத் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் விரிவடைந்தது.** 2020 மே மாதத்தினை விட 2021 மே மாதத்தில் ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்புக்கு எதிராக இறக்குமதிச் செலவினம் பெருமளவு அதிகரித்திருந்தமையானது வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைதலைத் தோற்றுவித்தது. இருப்பினும், வர்த்தகப் பற்றாக்குறை 2021 ஏப்பிறலில் பதிவான ஐ.அ.டொலர் 889 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் மாதாந்த அடிப்படையிலான முன்னேற்றத்தினைக் காண்பித்தது. ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2020இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,101 மில்லியனிலிருந்து 2021 சனவரி தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,663 மில்லியனிற்கு விரிவடைந்தது. இவ்விளைவிற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் வரைபடம் 1 இல் காட்டப்பட்டுள்ளன.

**வர்த்தக மாற்று விகிதம்:** இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதம் 2020 மேயுடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் 11.5 சதவீதத்தினால் தேய்வடைந்தமைக்கு இறக்குமதி விலைகள் அதிகரித்திருந்த வேளையில் ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணங்களாகும்.

**வரைபடம்: 1 : 2021 சனவரி – மேயில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பிற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2020 – 2021)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2020-2021)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகள் செயலாற்றம்

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சகல முக்கிய துறைகளிலிருந்துமான உயர்ந்தளவான வருவாய்களுடன் 2020 மே மற்றும் 2021 ஏப்பிறலுடன் ஒப்பிடுமிடத்து முறையே 52.0 சதவீத 9.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து 2021 மேயில் ஐ.அ.டொலர் 892 மில்லியனிற்கு அதிகரித்தன.** 2020இன் முன்னைய மாதங்களில் நாடளாவிய ரீதியான முடக்க காலப்பகுதியில் தாழ்ந்த புள்ளிவிபர அடிப்படைத் தாக்கத்தினால் பெரிதும் பங்களிப்புச் செய்யப்பட்டு 2020இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2021 சனவரி தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 4,692 மில்லியன் கொண்ட 33.3 சதவீத அதிகரிப்புடன் விளங்கின.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** சகல துணைத் துறைகளதும் ஏற்றுமதிகளிலான முன்னேற்றங்களுடன், கைத்தொழில் பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 மே மாதத்தினை விட 2021 மே மாதத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் மாதாந்த அதிகரிப்பானது 2021 மே மாதம் 6.2 சதவீதமாக இருந்தமைக்கு பெரும்பாலான துணைத்துறைகளில் பரந்த அடிப்படையிலான முன்னேற்றமே காரணமாகும். இறப்பர் ஏற்றுமதிகள் (முக்கியமாக இறப்பர் டயர்கள் மற்றும் கையுறைகள்), பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் (முக்கியமாக இலத்திரனியல் சாதனங்கள்), ஆடைகள் மற்றும் புடவைகள் (முக்கியமாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகள்) இரசாயன உற்பத்திகள் (முக்கியமாக செயற்படு கரியம்) மற்றும் அடிப்படை உலோகங்கள் 2021 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இருப்பினும், அச்சிடல் கைத்தொழில் பொருட்கள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தோல், பயணப் பொருட்கள் மற்றும் பாதணிகள் போன்ற துணைத் துறைகள் அதே காலப்பகுதியில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்களிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த போதிலும் பெற்றோலிய உற்பத்தி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மாதாந்த அடிப்படையில் 2021 மேயில் வீழ்ச்சியடைந்தமைக்கு நப்தா போன்ற ஏனைய பெற்றோலிய உற்பத்திகளின் குறைந்தளவான ஏற்றுமதிகளே காரணமாகும்.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** வேளாண்மைப் பொருட்கள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 2020 மேயுடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் 8.9 சதவீதத்தினால் அதிகரித்தன. கடலுணவு, இயற்கை இறப்பர் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பன தவிர வேளாண்மைப் ஏற்றுமதிகளின் சகல துணைத் துறைகளும் மாதாந்த அடிப்படையில் அதிகரித்தன. சராசரி ஏற்றுமதி விலைகளில் சிறிதளவான வீழ்ச்சி காணப்பட்ட போதிலும் உயர்ந்த ஏற்றுமதி அளவுகளின் காரணமாக தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021 ஏப்பிறலிலும் பார்க்க 2021 மேயில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. மேலும், வாசனைத்திரவியங்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (முக்கியமாக கருவா, சாதிக்காய் மற்றும் சாதிபத்திரி), தெங்கு (உள்ளீடு மற்றும் உள்ளீடற்ற உற்பத்திகள் இரண்டும்) மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகள் மாதாந்த அடிப்படையில் 2021 மேயில் மேம்பட்டன.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 மே மற்றும் 2021 ஏப்பிறல் மாதங்களிலும் பார்க்க 2021 மேயில் அதிகரித்துக் காணப்பட்டன. கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மாதாந்த அடிப்படையில் 2021 மேயில் அதிகரித்தமைக்கு மண் மற்றும் கற்களிலிருந்தான (முக்கியமாக கருங்கல் மற்றும் காரீயத்தூள்) உயர்ந்தளவான வருவாய்களே காரணமாகும்.

**ஏற்றுமதிச் சுட்டெண்கள்:** ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 54.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், அலகுப் பெறுமதிச் சுட்டெண் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 மேயில் 1.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது உயர்ந்த ஏற்றுமதி அளவுகளின் தாக்கத்தின் காரணமாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டுகிறது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | மே 2020 (ஐ.அ.டொ. மில்) | மே 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-மே 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-மே 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **401.0** | **687.0** | **71.3** | **2,695.8** | **3,636.4** | **34.9** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 29.3 | 38.9 | 32.9 | 156.1 | 206.3 | 32.1 |
| விலங்குத்தீன் | 8.2 | 11.3 | 38.2 | 37.9 | 50.2 | 32.3 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 220.1 | 372.4 | 69.2 | 1,540.2 | 2,071.9 | 34.5 |
| இதில் ஆடைகள் | 189.1 | 334.9 | 77.0 | 1,411.2 | 1,890.9 | 34.0 |
| புடவைகள் | 15.0 | 27.6 | 83.6 | 85.1 | 126.5 | 48.7 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 16.0 | 10.0 | -37.6 | 44.0 | 54.5 | 23.9 |
| இறப்பர் உற்பத்திகள் | 49.4 | 88.9 | 80.1 | 269.7 | 406.8 | 50.8 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 6.8 | 16.0 | 133.5 | 61.6 | 111.0 | 80.2 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 20.8 | 40.9 | 96.3 | 116.3 | 196.9 | 69.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 4.1 | 7.9 | 94.1 | 23.2 | 42.0 | 80.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 10.6 | 33.3 | 213.7 | 202.8 | 155.4 | -23.4 |
| இரசாயன உற்பத்திகள் | 13.9 | 19.6 | 40.8 | 59.3 | 87.8 | 48.1 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 7.1 | 9.7 | 36.7 | 36.4 | 49.4 | 35.7 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 1.4 | 2.1 | 46.7 | 13.1 | 24.1 | 83.7 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 2.6 | 2.9 | 11.6 | 20.2 | 17.8 | -11.8 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 3.5 | 5.7 | 62.5 | 19.8 | 29.9 | 50.9 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 8.1 | 13.3 | 64.5 | 45.8 | 55.3 | 20.8 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 1.2 | 2.9 | 146.7 | 7.6 | 14.3 | 86.6 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 13.8 | 21.1 | 52.7 | 85.6 | 117.3 | 37.0 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **183.0** | **199.3** | **8.9** | **809.8** | **1,028.7** | **27.0** |
| தேயிலை | 108.3 | 109.2 | 0.9 | 456.7 | 526.6 | 15.3 |
| இறப்பர் | 1.8 | 2.3 | 24.4 | 10.6 | 17.6 | 66.9 |
| தேங்காய் | 27.9 | 34.0 | 22.2 | 112.6 | 157.7 | 40.1 |
| வாசனைத்திரவியங்கள் | 19.3 | 25.2 | 30.5 | 82.4 | 161.3 | 95.9 |
| காய்கறிகள் | 1.9 | 1.9 | 1.5 | 9.9 | 10.3 | 3.4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.2 | 1.7 | -21.6 | 8.2 | 13.1 | 59.2 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 10.2 | 9.9 | -2.7 | 54.7 | 51.5 | -5.8 |
| கடலுணவு | 11.5 | 15.0 | 30.5 | 74.8 | 90.6 | 21.1 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.2** | **4.5** | **99.0** | **8.1** | **20.4** | **152.2** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **0.5** | **1.0** | **123.2** | **4.9** | **6.6** | **34.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **586.7** | **891.7** | **52.0** | **3,518.6** | **4,692.0** | **33.3** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: வணிகப்பொருள் இறக்குமதிகளின் மீதான செலவினம் 2020 மே மாதத்தில் ஐ.அ.டொலர் 994 மில்லியனிலிருந்து 2021 மே மாதத்தில் ஐ.அ.டொலர் 1,607 மில்லியனிற்கு 61.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.** இருப்பினும், இறக்குமதிச் செலவினம் சகல முக்கிய இறக்குமதித் துறைகளிலும் குறைந்தளவான செலவினத்தினால் ஆதரவளிக்கப்பட்டு 2021 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 1,707 மில்லியன் பெறுமதியான இறக்குமதிகளுடனும் ஒப்பிடுகையில் 2021 மேயில் குறைவடைந்து காணப்பட்டது. அதேவேளை, ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் 2020இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 26.2 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்து 2021 சனவரி தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 8,356 மில்லியனிற்கு வகைகூறின.

**நுகர்வுப் பொருட்கள்:** உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் இரண்டினதும் இறக்குமதி மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு (4.1 சதவீதத்தினால்) மற்றும் மாதாந்த (9.0 சதவீதத்தினால்) அடிப்படைகள் இரண்டிலும் 2021 மேயில் வீழ்ச்சியடைந்தது. உணவு மற்றும் குடிபானங்களில் சீனி மற்றும் இனிப்பு வகைகள், (முக்கியமாக கரும்பு), பழங்கள் (முக்கியமாக அப்பிள் மற்றும் உலர் பழங்கள்) மற்றும் பால் உற்பத்திகள் (முக்கியமாக பால்மா மற்றும் பாலாடைக்கட்டி) என்பன ஒரு மாதத்திற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் குறைந்த இறக்குமதிச் செலவினத்தைப் பதிவுசெய்தன. இருப்பினும், காய்கறிகள் (முக்கியமாக பருப்பும் வெங்காயமும்), எண்ணெய்களும் கொழுப்புக்களும் (முக்கியமாக தேங்காய் எண்ணெய்), வாசனைத் திரவியங்கள் (முக்கியமாக மிளகாய் மற்றும் கொத்தமல்லி) மற்றும் கடலுணவு (முக்கியமாக பதப்படுத்தப்பட்ட மீன்) என்பனவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் மாதாந்த அடிப்படையில் 2021 மேயில் அதிகரித்தது. உணவல்லா நுகர்வுப் பொருட்களில் பெரும்பாலும் சகல துணைத் துறைகளதும் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் வீழ்ச்சியடைந்தமைக்கு வீட்டு உபயோகப் பொருட்கள் (முக்கியமாக குளிர்சாதனப்பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிகள்), மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் மற்றும் புடவைகள் மற்றும் துணைப்பொருட்கள் மீதான குறைந்த செலவினமே காரணமாகும்.

**இடைநிலைப் பொருட்கள்:** 2021 மேயில் இடைநிலைப் பொருட்கள் மீதான செலவினம் ஓராண்டுக்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் 115.0 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டாலும் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எரிபொருள், வளமாக்கிகள் (முக்கியமாக யூரியா), கோதுமை மற்றும் சோளம், ஊர்திகள் மற்றும் பொறிப் பாகங்கள் (முக்கியமாக உந்து ஊர்திப் பாகங்கள்) மற்றும் இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 மேயில் வீழ்ச்சியடைந்த வேளையில், அடிப்படை உலோகங்கள் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு), இரசாயன உற்பத்திகள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் மற்றும் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் மாதாந்த அடிப்படையில் அதிகரித்தது. மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி போன்றவற்றினை உள்ளடக்கும் எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் வீழ்ச்சியடைந்ததுடன் இறக்குமதி விலைகள் அதிகரித்த போதிலும் குறைந்த இறக்குமதி அளவுகள் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது. மசகெண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலையானது 2021 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 66.44 உடன் (2020 மேயில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 25.44) ஒப்பிடுகையில் 2021 மேயில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 68.47 இற்கு அதிகரித்தது. இதனை ஒத்ததாக, சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் சராசரி இறக்குமதி விலை 2021 ஏப்பிறலில் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர்

571.23 இலிருந்து (2020 மேயில் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 291.38) 2021 மேயில் மெ.தொன்னொன்றிற்கு ஐ.அ.டொலர் 593.83 ஆக அதிகரித்தது.

**முதலீட்டுப் பொருட்கள்:** முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் மாதாந்த அடிப்படையில் 12.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தாலும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 மேயில் 27.9 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021 மேயில் மாதாந்த அடிப்படையிலான வீழ்ச்சி பொறி மற்றும் சாதனம் (முக்கியமாக பொறி மற்றும் சாதன பாகங்கள், விசைக்குழாய்கள் மற்றும் பொறியியல் சாதனம்) மற்றும் போக்குவரத்து சாதனம் (முக்கியமாக பாரவூர்திகள்) என்பனவற்றின் குறைந்த செலவினத்தினால் உந்தப்பட்டது. இருப்பினும், இரும்பு, உருக்கு மற்றும் அதன் பொருட்கள் போன்ற கட்டடப் பொருட்களின் செலவினம் அதேபோல் பொறி மற்றும் சாதனங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கடத்திச் சாதனங்கள், இலத்திரனியல் ஒருங்கிணைப்புச் சுற்று மற்றும் மருத்துவ மற்றும் ஆய்வுகூட சாதனங்கள் மீதான செலவினம் 2021 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2021 மேயில் அதிகரித்துக் காணப்பட்டது.

**இறக்குமதிச் சுட்டெண்கள்:** 2021 மேயில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 45.7 சதவீதத்தினாலும் 11.0 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இது இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்பானது உயர்ந்த இறக்குமதி அளவுகள் மற்றும் விலைகள் இரண்டினதும் ஒன்றிணைந்த தாக்கத்தின் காரணமாக அமைந்தன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | மே 2020 (ஐ.அ.டொ. மில்) | மே 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-மே 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-மே 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **264.4** | **253.6** | **-4.1** | **1,533.0** | **1,530.1** | **-0.2** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 122.1 | 121.0 | -0.9 | 685.4 | 749.8 | 9.4 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.8 | 3.2 | 73.6 | 15.7 | 16.0 | 1.5 |
| பாற்பண்ணை உற்பத்திகள் | 36.0 | 23.7 | -34.1 | 160.1 | 138.6 | -13.4 |
| காய்கறிகள் | 30.3 | 33.5 | 10.6 | 175.9 | 171.5 | -2.5 |
| கடலுணவு | 19.5 | 10.0 | -49.0 | 84.9 | 43.1 | -49.2 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 15.1 | 15.5 | 2.7 | 103.5 | 182.9 | 76.8 |
| வாசனைத்திரவியங்கள் | 9.6 | 12.1 | 26.0 | 59.8 | 59.5 | -0.4 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 9.8 | 23.0 | 135.8 | 85.6 | 138.2 | 61.5 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 142.3 | 132.6 | -6.8 | 847.6 | 780.2 | -8.0 |
| தனியாள் ஊர்திகள் | 47.5 | 0.5 | -99.0 | 264.2 | 4.0 | -98.5 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 49.0 | 41.1 | -16.2 | 213.8 | 233.4 | 9.2 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 10.2 | 15.4 | 50.6 | 76.7 | 113.0 | 47.3 |
| புடவை மற்றும் ஆடைப்பொருட்கள் | 8.1 | 15.4 | 88.7 | 93.5 | 90.3 | -3.4 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 9.0 | 26.8 | 198.5 | 72.0 | 163.8 | 127.5 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 8.9 | 11.5 | 28.9 | 57.2 | 65.0 | 13.6 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 9.6 | 22.0 | 130.4 | 70.2 | 110.8 | 57.8 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **486.3** | **1,045.4** | **115.0** | **3,602.0** | **5,111.1** | **41.9** |
| எரிபொருள் | 62.9 | 330.5 | 425.5 | 1,133.0 | 1,720.9 | 51.9 |
| இதில் மசகெண்ணெய் | 15.4 | 92.8 | 501.5 | 224.6 | 317.0 | 41.2 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 47.5 | 237.7 | 400.8 | 782.0 | 1,277.3 | 63.3 |
| நிலக்கரி | 0.0 | 0.0 | 788.9 | 126.3 | 126.6 | 0.2 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 5.1 | 8.2 | 61.0 | 32.3 | 51.7 | 60.1 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 121.0 | 235.7 | 94.7 | 889.9 | 1,174.3 | 32.0 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 29.2 | 42.6 | 46.0 | 149.2 | 189.4 | 26.9 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 16.7 | 22.4 | 34.6 | 86.0 | 109.0 | 26.8 |
| கோதுமை மற்றும் சோளம் | 39.8 | 20.8 | -47.8 | 128.7 | 141.0 | 9.6 |
| அடிப்படை உலோகங்கள் | 20.8 | 102.8 | 393.4 | 157.7 | 297.0 | 88.4 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 31.5 | 64.9 | 106.4 | 199.4 | 322.7 | 61.8 |
| இரசாயன உற்பத்திகள் | 60.5 | 100.9 | 66.8 | 316.0 | 465.5 | 47.3 |
| வளமாக்கி | 29.8 | 13.0 | -56.3 | 84.8 | 95.2 | 12.3 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 15.9 | 27.9 | 75.2 | 96.5 | 161.3 | 67.2 |
| கனிம உற்பத்திகள் | 7.7 | 15.9 | 106.7 | 60.1 | 60.4 | 0.5 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 45.4 | 59.7 | 31.4 | 268.5 | 322.7 | 20.2 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **240.9** | **308.1** | **27.9** | **1,474.3** | **1,711.2** | **16.1** |
| பொறி மற்றும் கருவிகள் | 158.1 | 183.2 | 15.9 | 843.6 | 1,096.2 | 30.0 |
| கட்டடப் பொருட்கள் | 57.8 | 101.1 | 74.9 | 417.2 | 482.9 | 15.7 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 24.8 | 23.3 | -6.2 | 212.3 | 131.0 | -38.3 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.1 | 0.5 | 221.5 | 1.2 | 1.1 | -9.0 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **2.2** | **0.3** | **-88.4** | **9.9** | **3.0** | **-69.1** |
| **மொத்த இறக்குமதிகள்** | **993.8** | **1,607.4** | **61.7** | **6,619.1** | **8,355.5** | **26.2** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **930.9** | **1,276.9** | **37.2** | **5,486.2** | **6,634.6** | **20.9** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

**2021 மேயிலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் அதன் வளர்ச்சி உத்வேகத்தைத் தொடர்ந்தும் பேணியது.** இதன்படி, தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021 மேயில் ஐ.அ.டொலர் 460 மில்லியனிற்கு 6.6 சதவீதத்தினால் அதிகரித்தன. முதல் ஐந்து மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 18.2 சதவீதத்தால் ஐ.அ.டொலர் 2,846 மில்லியனாக குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு பகுதியளவிலான தாழ்ந்த தளத்தாக்கம் காரணமாக அமைந்தது.

**சுற்றுலாத் துறையானது 2021 மேயில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான வருகைகளை பதிவு செய்தது.** சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட 4,168 வருகைகளுடன் ஒப்பிடும் போது 2021 மேயில் 1,497 ஆக பதிவுசெய்யப்பட்டன. மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2020இன் தொடர்பான காலத்திற்கான 507,311 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2021 முதல் ஐந்து மாத காலப்பகுதியில் 15,294 வருகைகளைப் பதிவுசெய்தன. 2021 மே காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முக்கிய மூல நாடுகளாக சீனா, ஜேர்மனி மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பன காணப்பட்டன. சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படுகின்ற சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2021 மேயில் ஐ.அ.டொலர் 2 மில்லியனாகக் காணப்பட்டன. சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2020இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 682 மில்லியனிற்கு எதிராக 2021 முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 21 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**வரைபடம் 8: மாதாந்த சுற்றுலாப்பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

**2021 மேயில் அரச பிணையங்கள் சந்தையில் சிறிதளவான தேறிய வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் பதிவு செய்யப்பட்டன.** 2021இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 14 மில்லியனாக விளங்கின. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டின் மொத்த வெளிநின்ற வெளிப்படுத்துகை 2021 மே இறுதியளவில் ஐ.அ.டொலர் 23 மில்லியனாக தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டது. அதேவேளை, 2021 மேயில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்து ஐ.அ.டொலர் 12 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று பதிவுசெய்யப்பட்டது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2021இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஐ.அ.டொலர் 119 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

**2021 மே இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் ஐ.அ.டொலர் 4.0 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது இறக்குமதிகளின் 2.7 மாதங்களுக்குச் சமனாகக் காணப்படுகின்றது.** அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 மே இறுதியில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனாக விளங்கி 4.6 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்படுகின்றது. மேலே அறிக்கையிடப்பட்ட ஒதுக்குகளின் மட்டமானது சீன மக்கள் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான சீன யுவான் 10 பில்லியன் பெறுமதியான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) மூன்று வருட இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையினை உள்ளடக்கவில்லை.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

**2021 மே மாத காலப்பகுதியில் செலாவணி வீதம் தொடர்ந்தும் பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டது.** மே மாத காலப்பகுதியில் இலங்கையின் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 0.02 சதவீத சிறிதளவானதொரு உயர்வினைப் பதிவுசெய்தது. 2021 யூலை 14 வரையான காலப்பகுதியில் ரூபா ஐ.அ. டொலருக்கெதிராக 6.7 சதவீத தேய்வினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2021 யூலை 14 வரையான காலப்பகுதியில் குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபா என்பனவற்றிற்கு எதிராக தேய்வடைந்தது. மத்திய வங்கி கடன்படாத வளங்களினூடாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக 2021 மே காலப்பகுதியிலும் அதேபோல் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியிலும் தேறிய அடிப்படையில் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைத் தொடர்ந்தும் ஈர்த்துக்கொண்டது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**







**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2019 | 2020 | (2021 யூலை 14 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | +0.6% | -2.6% | -6.7% |
| யூரோ | +2.6% | -11.2% | -2.6% |
| பவுண் ஸ்ரேலிங் | -2.8% | -6.2% | -7.9% |
| யப்பானிய யென் | -1.0% | -7.5% | -0.04% |
| அவுஸ்திரேலிய டொலர் | +1.3% | -11.4% | -3.7% |
| இந்தியன் ரூபா | +2.6% | 0.0% | -4.9% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி